உச்சநீதிமன்ற நீதிபதியாக பொறுப்பேற்க உள்ள சென்னை உயர்நீதிமன்ற (பொ) தலைமை நீதிபதி மகாதேவனை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

ஜூலை 23 முதல் ஆகஸ்டு 14 வரை

சென்னையில் 55 மின்சார ரயில்கள் ரத்து!

தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, ஜூலை.18-

சென்னையில் வரும் 23ம் தேதி முதல் அடுத்த மாதம் 14-ம் தேதி வரை 55 மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகிறது.

இதற்கு மாற்றாகவும், பயணிகள் வசதிக்காகவும் பல்வேறு சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட உள்ளது.

தாம்பரம் பணிமனையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள இருப்பதால் வரும் 23-ம் தேதி முதல் அடுத்த மாதம் 14-ம் தேதி வரையில் 55 மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்பட உள்ளது என தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. இதுதொடர்பாக தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

சென்னை கடற்கரையிலிருந்து காலை 9.40, 9.48, 10.04, 10.12, 10.24, 10.30, 10.36, 10.46, 11.06, 11.14, 11.22, 11.30, 11.50, மதியம் 12, 12.10, 12.30, 12.50 இரவு 11.05, 11.30, 11.59 ஆகிய நேரங்களில் புறப்பட்டு தாம்பரம் செல்லும் மின்சார ரெயில் வரும் 23-ம் தேதி முதல் ஆகஸ்டு14-ம் தேதி வரை ரத்து செய்யப்படுகிறது.

சென்னை கடற்கரையிலிருந்து காலை 9.30, 9.56, 10.56, 11.40, மதியம் 12.20, 12.40, இரவு 10.40 ஆகிய நேரங்களில் புறப்பட்டு செங்கல்பட்டு செல்லும் மின்சார ரெயில்கள் 23-ம் தேதி முதல் ஆகஸ்டு 14-ம் தேதி வரை ரத்து செய்யப்படுகிறது.

சென்னை கடற்கரையிலிருந்து இரவு 7.19, 8.15, 8.45, 8.55, 9.40 ஆகிய நேரங்களில் புறப்பட்டு கூடுவாஞ்சேரி செல்லும் மின்சார ரெயில்கள் வருகிற 23-ம் தேதி முதல் ஆகஸ்டு 14-ம் தேதி வரை ரத்து செய்யப்படுகிறது.

தாம்பரத்தில் இருந்து காலை 10.30, 10.40, 11, 11.10, 11.30, 11.40, மதியம் 12.05, 12.35, 1, 1.30, இரவு 11.40 ஆகிய நேரங்களில் புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரெயில்கள் வரும் 23-ம் தேதி முதல் ஆகஸ்டு 14-ம் தேதி வரை ரத்து செய்யப்படுகிறது.

செங்கல்பட்டிலிருந்து காலை 11, 11.30, மதியம் 12, இரவு 11 ஆகிய நேரங்களில் புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரெயில்கள் 23-ம் தேதி முதல் ஆகஸ்டு 14-ம் தேதி வரை ரத்து செய்யப்படுகிறது.

கூடுவாஞ்சேரியிலிருந்து இரவு 8.55, 9.45, 10.10, 10.25, 11.20 ஆகிய நேரங்களில் புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரெயில் வரும் 23-ம் தேதி முதல் ஆகஸ்டு 14-ம் தேதி வரை ரத்து செய்யப்படுகிறது.

செங்கல்பட்டிலிருந்து காலை 10 மணிக்கு புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயில் வரும் 23-ம் தேதி முதல் ஆகஸ்ட் 14-ம் தேதி வரை ரத்து செய்யப்படுகிறது.

காஞ்சிபுரத்திலிருந்து காலை 9.30 மணிக்கு புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரெயில் வரும் 23-ம் தேதி முதல் ஆகஸ்டு 14-ம் தேதி வரை ரத்து செய்யப்படுகிறது.

திருமால்பூரில் இருந்து காலை 11.05 மணிக்கு புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரெயில் 23-ம் தேதி முதல் ஆகஸ்டு 14-ம் தேதி வரை ரத்து செய்யப்படுகிறது. இதற்கு மாற்றாகவும், பயணிகள் வசதிக்காகவும் பல்வேறு சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட உள்ளது.

சென்னை கடற்கரை-பல்லாவரம் இடையே 15 சிறப்பு மின்சார ரெயில்களும், பல்லாவரம்-சென்னை கடற்கரை இடையே 15 சிறப்பு மின்சார ரெயில்களும், கூடுவாஞ்சேரி-செங்கல்பட்டு இடையே 7 சிறப்பு மின்சார ரெயில்களும், செங்கல்பட்டு-கூடுவாஞ்சேரி இடையே 7 சிறப்பு மின்சார ரெயில்கள் என மொத்தம் 44 சிறப்பு மின்சார ரெயில்கள் வரும் 23-ம் தேதி முதல் ஆகஸ்டு14-ம் தேதி வரை இயக்கப்பட உள்ளது.

சென்னை கடற்கரையிலிருந்து காலை 9.30, 9.50, 10.10, 10.30, 10.50, 11.10, 11.30, 11.50, மதியம் 12.10, 12.30, 12.50, இரவு 10.40, 11.05, 11.30, 11.59, ஆகிய நேரங்களில் புறப்பட்டு வரும் சிறப்பு மின்சார ரெயில் பல்லாவரம் வரை இயக்கப்படுகிறது.

மறுமார்க்கமாக, பல்லாவரத்தில் இருந்து காலை 10.20, 10.40, 11, 11.20, 11.40, மதியம் 12, 12.20, 12.40, 1, 1.20, 1.40, இரவு 11.30, 11.55, 12.20, 12.45 ஆகிய நேரங்களில் புறப்பட்டு வரும் சிறப்பு மின்சார ரெயில் சென்னை கடற்கரை வரை இயக்கப்படுகிறது.

கூடுவாஞ்சேரியிலிருந்து காலை 10.45, 11.10, மதியம் 12, 12.50, 1.35, 1.55, இரவு 11.55 ஆகிய நேரங்களில் புறப்பட்டு செங்கல்பட்டு வரை இயக்கப்படுகிறது.

மறுமார்க்கமாக, செங்கல்பட்டிலிருந்து காலை 10, 10.30, 11, 11.45, மதியம் 12.30, 1, இரவு 11 ஆகிய நேரங்களில் புறப்பட்டு வரும் சிறப்பு மின்சார ரெயில் கூடுவாஞ்சேரி வரை இயக்கப்படுகிறது.

2 மாவட்டங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு!

வானிலை ஆய்வு மையம்!

சென்னை, ஜூலை.18-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நாளை மறுநாள் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் இன்றும், நாளையும் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வரும் 19ந்தேதி முதல் 23ந்தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பர்கூரில் - பள்ளிகளுக்கு

ரூ.23 லட்சத்தில் உபகரணப் பொருட்கள் வழங்கல்!

பர்கூர், ஜூலை 18-

பர்கூர் சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் அமர்ந்து படிப்பதற்கு மேசை நாற்காலிகள் இல்லாததை அறிந்த பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் 12 அரசு மேல்நிலை பள்ளிகளுக்கு 23 லட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மேசை, நாற்காலிகளை வழங்க திட்டமிட்டு நிதி ஒதுக்கி தந்தார். இந்த நிதியிலிருந்து மேசை, நாற்காலிகள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் ஒப்படைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கிருஷ்ணகிரியில் உள்ள தொழிற்பேட்டையில் நடந்த நிகழ்ச்சிகளில் 12 அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் மேசை, நாற்காலிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் அஸ்லாம், ஒன்றிய செயலாளர்கள் சாந்த மூர்த்தி, ராஜேந்திரன், தேங்காய் சுப்ரமணி, அறிஞர், விவசாய அணி அமைப்பாளர் இளையராஜா , மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் லட்சுமி பிரியா, தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் சுரேந்திரன் , எஸ் எஸ் இண்டஸ்ட்ரி சாதிக் பாஷா உள்ளிட்ட நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி 6 வது வார்டு கோவில்பதாகை மங்களம் நகரில் மழைநீர் வடிகால் கால்வாய் பணிகளை ஆய்வு மேற்கொண்டு திருநின்றவூர் நகராட்சியில் உட்பட 13.14.15.16.17 ஆகிய வார்டுகளில் மழை நீர் தேங்காமல் செல்ல கால்வாய் சீரமைக்கும் பணியை துவக்கி வைத்தார். ஆவடி மேயர் ஜி.உதயகுமார், நகரக் கழக செயலாளர் தி.வை.இரவி, பகுதி கழகச் செயலாளர்கள் ஜி. நாராயண பிரசாத், பொன் விஜயன், ஜி.ஆர்.திருமலை, உள்பட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், கவுன்சிலர்கள் பலர் கலந்து கொண்டனர்கள்.

செங்கல்பட்டு மாவட்டம், சிங்கப்பெருமாள் கோயில், ஜி.எஸ்.டி சாலையில் ரூ.4.04 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன மருத்துவ உபகரணங்கள் கொண்ட 24 மணி நேர அவசர சிகிச்சை மையத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். உடன் பொது சுகாதாரம் மற்றும் மருந்து துறை இயக்குநர் மரு.செல்வ விநாயகம், மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

சிங்கப்பெருமாள் கோயிலில்

மேம்படுத்தப்பட்ட அவசர சிகிச்சை மையம் திறப்பு!

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 18 -

செங்கல்பட்டு மாவட்டம், சிங்கபெருமாள் கோயில், ஜி.எஸ்.டி சாலையில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன மருத்துவ உபகரணங்கள் கொண்ட 24 மணி நேர அவசர சிகிச்சை மையம் மற்றும் துணை சுகாதார நிலைய கட்டிடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம், சிங்கபெருமாள் கோயில், ஜி.எஸ்.டி சாலையில் நேற்று (17.07.2024) ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன மருத்துவ உபகரணங்கள் கொண்ட 24 மணி நேர அவசர சிகிச்சை மையம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், இரும்புலிச்சேரி கிராமத்தில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம், இலத்தூர் ஒன்றியம், கடுகுபட்டு கிராமத்தில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் என மொத்தம் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் 3 மருத்துவ கட்டிடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், தலைமையில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், மா. சுப்பிரமணியன் ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன்

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

செங்கல்பட்டு மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 32,04,128 ஆகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறது, செங்கல்பட்டு மாவட்டத்தில், ரூ.23.95 கோடி செலவில், 10 நகர்புற நலவாழ்வு மைய கட்டிடங்கள், 10 துணை சுகாதார நிலையங்கள், 12 ஆரம்ப சுகாதார நிலையங்களில் வட்டார பொது சுகாதார அலகு, செவிலியர் குடியிருப்பு, புற நோயாளிகள் பிரிவு, பாலியேட்டிங் நோய் தடுப்பு மையம் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் மற்றும் தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் நுரையீரல் மறுவாழ்வு சிகிச்சை மையம், நவீன சமையல்கூடம், ஆக்ஸிஜன் படுக்கையுடன் கூடிய காசநோய் சிகிச்சை மையம், சி.டி.ஸ்கேன் உபகரணம் மற்றும் செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், ஊட்டச்சத்து பூங்கா, மேம்படுத்தப்பட்ட குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு, பரவலாக்கப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்பு, உடற்பயிற்சி கூடம் மற்றும் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் தொடங்கி வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் ரூ.221.28 கோடி செலவில் 40 புதிய மருத்துவ கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

108 அவசர கால ஊர்தி சேவையானது 2008ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. 108 அவசர கால சேவையானது தமிழ்நாடு அரசு EMRI GHS உடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சேவை 24x7 மணி நேரமும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படு கிறது. பொதுமக்கள் அவசர கால மருத்துவ தேவைக்கு தொலைபேசி எண்ணான 108ஐ தொடர்பு கொண்டு பயன் பெறுகின்றனர்.

அவசர கால சேவையை செம்மைப்படுத்தும் விதமாக சாலை விபத்துகளில் காயம் அடைவோரை உடனடியாக ஒரு மணி நேரத்திற்குள் (கோல்டன் மணிக்குள்) அருகாமையில் உள்ள மருத்துவமனைக்கு சென்றடைய அதிக விபத்துக்கள் நடைபெறும் இடங்களை கண்டறியப்பட்டு அதற்கு அருகாமையில் அவசரகால ஊர்திகளை நிறுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டோர் சென்றடையும் காலம் 16.49 நிமிடங்களில் இருந்து 11.21 நிமிடமாக குறைக்கப்பட்டது. இதன் மூலம் சாலை விபத்தால் பாதிக்கப்பட்டோர் அருகாமையில் உள்ள மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு செல்வதன் மூலம் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலை யங்களில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான சேவைகள், குழந்தை பராமரிப்பு, தடுப்பூசி சேவைகள், சிறு நோய்களுக்கு சிகிச்சை, தொற்றுநோய்கள் தடுப்பு சேவைகள், தொற்றா நோய்களுக்கு சிகிச்சை போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

நெடுஞ்சாலைகளில் விபத்து நடக்கும் பகுதிகளில் அருகில் மருத்துவமனை இல்லாத பொழுது அந்த இடங்களில் 24 மணி நேரமும் செயல்படும் அவசர சிகிச்சை மையம் அமைக்கப்பட்டு விபத்துக்களால் பாதிக் கப்பட்டவரை உடனடியாக அவசர சிகிச்சை மையத்திற்கு கொண்டு சென்று தக்க தருணத்தில் அவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து அங்கிருந்து அருகாமையில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுவதன் மூலம் 95% பேர் காப்பாற்றப்பட்டு வருகின்றனர். இந்த மையங்கள் தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்து விபத்துக்கள் மட்டுமின்றி, மாரடைப்பு, சுவாசிப்பதில் சிரமம், பாம்பு கடி, அலர்ஜி, வயிற்று வலி, விழுந்த காயம் போன்ற பிற மருத்துவ அவசரநிலைகளில் உடனடி அவசர சிகிச்சையை வழங்குகிறது.

இத்தகைய மையங்களில் அவசர மேலாண்மை சேவைகளை கையாள்வதில் சிறந்த பயிற்சி பெற்ற நான்கு மருத்துவர்கள், 12 செவிலியர்கள் (Paramedics) பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இச்சேவை மையத்தில் உயிர்காக்கக்கூடிய அதிநவீன மருத்துவ உபகரணங்கள், வென்டிவேட்டர், இசிஜி மற்றும் அவசர சிகிச்சைக்கான அனைத்து மருந்து வகைகளும் வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய மையங்களில் விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களை நிலைப்படுத்தி, அருகிலுள்ள முதல் நிலை பராமரிப்பு மையத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

மேலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் சாலை விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்கள் இடங்கள் கண்டறிய ஆய்வு நடத்தும் பொழுது தமிழ் நாட்டில் தலைநகரில் உள்ள சென்னையை தென்மாவட்டங்களையும் இணைக்கும் பிரதான சாலையாக உள்ள GST சாலையில் அமைந்துள்ள சிங்கபெருமாள் கோவில் சாலை மற்றும் அருகாமையில் அதிக விபத்துகள் நடைபெறுவதால், விபத்துக்களால் பாதிக்கப்பட்டவரை உடனடியாக சிகிச்சை அளிக்கும் வண்ணமாக சிங்கபெருமாள் கோவில் பகுதியில் அவசர கால சிகிச்சைமையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2017-2018 ஆம் ஆண்டு தேசிய ரூர்பன் திட்டத்தின் கீழ் சிங்கபெருமாள் கோயிலில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்கும் வகையில் அவசர சிகிச்சை மையம் கட்டுவதற்கு ரூ.404 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிங்கபெருமாள் கோயில் பகுதியில் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் அவசரசிகிச்சை மையம் கட்டி முடிக்கப்பட்டு இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்படுகிறது. இதில் ரூ.85 லட்சத்தில் கட்டுமானப் பணிகளும், ரூ.19.50 வட்சத்தில் சுற்றுச்சுவர் கட்டும் பணியும் செய்யப்பட்டுள்ளது. இந்த அவசர சிகிச்சை மையங்களில் ரூ.70 லட்சம் மதிப்பில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. இச் சேவை மையத்தில் உயிர்காக்கக் கூடிய அதிநவீன மருத்துவ உபகரணங்கள், வெண்டிலேட்டர், இசிஜி மற்றும் அவசர சிகிச்சைக்கான அனைத்து மருந்து வகைகளும் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன்

இதில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்ததாவது:

செங்கல்பட்டு மாவட்டத்தில் 49 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும், 10 நகர் புற நல வாழ்வு மையங்களும், ஒரு மாவட்ட தலைமை மருத்துவமனை, 4 தாலுகா அரசு மருத்துவமனைகள், ஒரு அரசு மருத்து வமனை மருத்துவக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன. செங்கல்பட்டு மாவட்டத்தில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ் இதுவரையில் 97,051 கர்ப்பிணி பெண் பயனாளிகளுக்கு ரூபாய் 46 கோடியே 29 லட்சத்து 34 ஆயிரம் மதிப்பீட்டில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன. சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சிங்கப்பெருமாள் கோயில் பகுதியில் அதிக விபத்துக்கள் நடைபெறுவதால் விபத்துகளால் பாதிக்கப்படுவோருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கும் வண்ணமாக தேசிய ரூபன் திட்டத்தின் கீழ் ரூபாய் 4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் அவசர சிகிச்சை மையம் அதிநவீன மருத்துவ உபகரணங்கள், சுற்றுச்சுவர் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன மக்களின் ஆரோக்கியமான வாழ்விற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களாலும் கொண்டுவரப்பட்ட வருமுன் காப்போம் திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம், கலைஞர் காப்பீட்டு திட்டம், 108 ஆம்புலன்ஸ் சேவை, இளம் சிறார் இருதய காப்பீட்டு திட்டம், மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மை காப்போம் 48 திட்டம், பள்ளி சிறார் நலத்திட்டம், மகப்பேறு திட்டங்கள் என மக்கள் நல்வாழ்வு திட்டங்கள் எண்ணற்ற திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தை பொருத்தவரையில் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் 20 இலட்சத்து 44 ஆயிரத்து 347 தொடர் சேவையில் பொது மக்கள் பயனடைந்துள்ளனர். இதே போன்று இன்னுயூர் காப்போம் திட்டத்தின் மூலம் ரூபாய் 5 கோடியே 65 லட்சம் மதிப்பீட்டில் இதுவரையில் 5 ஆயிரத்து 954 மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது. கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் 72 முகாம்கள் நடத்தப்பட்டு 72 ஆயிரத்து 365 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். நடப்பாண்டும் 24 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. சிறுநீரக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 804 நபர்களுக்கும், இதயம் காப்போம் திட்டத்தின் கீழ் 205 நபர்களுக்கும் தொடர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், பொது சுகாதாரம் மற்றும் மருந்து துறை இயக்குநர் மரு.செல்வ விநாயகம், சார் ஆட்சியர் நாராயண சர்மா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.அனாமிகா ரமேஷ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பரணிதரன், திருத்தேரி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.விஜயலட்சுமி, 108 சேவை மாநில செயல்தலைவர் செல்வகுமார், உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட இரும்புலிக்குறிச்சி (வடக்கு) ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா மற்றும் பலர் உள்ளனர்.